## 15.2 பொது பாதை வழி நிலங்களை தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கான தளவாடகை விதித்தல்

வருவாய் (நி.நி.5(2)) துறை

அரசாணை (நிலை) எண்.172 நாள் : 28.03.2000

படிக்க :

அரசாணை (நிலை), எண்.1002, வருவாய், நாள்:02.12.1993.

**ஆணை**

அரசுப் புறம்போக்கு நிலங்களில் விவசாயத்திற்காக குழாய் பதிக்க அரசாணை எண்.1002, வருவாய், நாள் : 02.12.1993–இல், குறிப்பிட்டுள்ளவாறு தளவாடகை விதிக்கப்படுகிறது.

2. தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்கள் பொது பாதை வழி நிலங்களை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்துகின்றன. எனவே, 1993–இல் நிர்ணயிக்கப்பட்ட தளவாடகையை அடிப்படையாக வைத்துக் கொண்டு, குறிப்பிட்ட வியாபார நோக்கத்தை கருத்திற்கொண்டு, மாற்றியமைத்தல் அவசியம் ஆகிறது. இது குறித்து அரசு நன்கு ஆய்வு செய்தது. தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு தளவாடகை நிர்ணயம் செய்வதை பொறுத்தவரை அரசு பின்வருமாறு முடிவு செய்துள்ளது –

1993–ஆம் ஆண்டு, ஐந்து வகையாக பிரிக்கப்பட்ட தளவாடகை உள்ளாட்சி நிறுவனங்கள் சட்ட திருத்தங்களைக் கருத்தில்கொண்டு தற்பொழுது நான்கு வகையாக பிரித்திடப்பட வேண்டும் அவை –

(அ) (1) கிராம ஊராட்சிகள்;
(2) பேரூராட்சிகள் / நகராட்சிகள்;
(3) மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி மாநகராட்சிகள்;
(4) சென்னை மாநகராட்சி

(ஆ) வியாபார நோக்குடன் அனுமதி கோரும் தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு 1993– ஆம் ஆண்டு, தளவாடகைகள், இரு மடங்காக்கி அடிப்படையாக அமைத்திடல் வேண்டும்.

(இ) பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு புதிய வகைபாடு மாற்றத்தினால் ஒரு இடைப்பட்ட விகிதம் அமைத்திடல் வேண்டும்.

3. இதன்படி, தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு தளவாடகை பின்வருமாறு நிர்ணயம் செய்தும், இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள தளவாடகை மூன்று ஆண்டுகளுக்கொருமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | இனம் | நிர்ணயிக்கப்பட்ட தளவாடகை |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | கிராம ஊராட்சிகள் | ரூ.4,400/–<br>(ஒரு கிலோ மீட்டருக்கு)<br>ஒரு ஆண்டிற்கு (தல தீர்வை / உபரி தலத் தீர்வை உட்பட) |
| 2 | பேரூராட்சிகள் / நகராட்சிகள் | ரூ.5,500/–<br>(ஒரு கிலோ மீட்டர் / ஒரு ஆண்டிற்கு) |
| 3 | மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி மாநகராட்சிகள் | ரூ.6,300/–<br>(ஒரு கிலோ மீட்டர் / ஒரு ஆண்டிற்கு) |
| 4 | சென்னை மாநகராட்சி | ரூ.9,400/–<br>(ஒரு கிலோ மீட்டர் / ஒரு ஆண்டிற்கு) |

4. மேலும், நில நிர்வாக ஆணையர், தளவாடகையினை மூன்று ஆண்டுகளுக்கொருமுறை மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்து, அதற்கான செயற் குறிப்புகளை அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.616/FS/F/2000, நாள்: 28.02.2000 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**தேவேந்திரநாத் சாரங்கி**

அரசு செயலாளர்